# நடப்பு நிகழ்வுகள்- ஏப்ரல் 10 - 2018

- உலக **ஓமியோபதி தினம்** - ஏப்ரல் 10
  ஜெர்மன் நாட்டு மருத்துவர் சாமுவேல் ஹானிமோன், 1796 ஆம் ஆண்டு 'ஓமியோபதி' என்ற மருத்துவ முறையை உலகிற்கு அறிமுகப் படுத்தினார். இவரின் பிறந்தநாளான ஏப்ரல் 10 ஓமியோபதி தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

- உலக ஓமியோபதி வாரம் ஏப்ரல் 10-16

- இந்தியா - பங்களாதேஷ் இடையே சிலிகுரி (Siliguri, India) -பார்பதிபூர் (Parbatipur, Bangladesh) நகரங்களுக்கு இடையே 129.5கி.மீ எண்ணெய்குழாய் அமைக்கும் திட்டம், அணு ஆற்றல் துறையில் ஒத்துழைப்பு உள்ளான ஆறு ஒப்பந்தங்கள் 09-04-18 அன்று செய்து கொள்ளப்பட்டுள்ளன.

- 2018ஆம் ஆண்டின் "போ ஆப் ஆசிய மன்ற மாநாடு" சீனா நாட்டின் ஹைய்நான் மாநிலத்தின் போ ஆவ் நகரில் ஏப்ரல் 08 முதல் 11 வரை நடைபெறுகிறது. இந்த மாநாட்டின் முக்கியமான கொள்கை உலகமயமாக்கல், சிறப்பான ஆசியா, செழுமையான வளர்ச்சி, புத்தாக்கம் என்பனவாகும். "போ ஆப் ஆசிய மன்றம்" (Boao Forum for Asia) 2001 ம் ஆண்டு சீனாவின் பீஜிங் நகரை தலைமையிடமாக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது.

- முன்னால் ஐ.நா சபையின் செயலாளர் பான் கீ மூன், ஆசியாவின் போவா மன்றத்தின் (Boao Forum) புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- மத்திய பணியாளர் தேர்வாணைய (UPSC) உறுப்பினராக "எம்.சதிதியவதி" அவர்கள் ஏப்ரல் 9 அன்று பொறுப்பேற்றுள்ளார். மத்திய பணியாளர் தேர்வாணைய (UPSC) தலைவர் 'வினய் மிட்டல்' பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

- ஹங்கேரி நாட்டு நாடாளுமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் "விக்டர் ஆர்பன்"(54) மிண்டும் பிரதமராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர் "பிடஸ் கட்சியை" சேர்ந்தவர்.

- சவுதி அரேபியாவில் உலகிலேயே மிகப் பெரிய சூரிய ஒளி மின்திட்டம் தொடங்கப்படவுள்ளது. இங்கு 13 இலட்சம் கோடியில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. சவுதி அரேபியாவின் நிதி நிறுவனமும், ஜப்பானிய சாப்ட் பேங்க் குரூப் கார்ப்பரேசன் நிறுவனமும் இணைந்து இதை உருவாக்குகின்றன.

- சிங்கப்பூர் நாட்டில் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரீத்தம் சிங் அந்நாட்டின் பிரதான எதிர்கட்சியான "தொழிலாளர் கட்சியின் பொதுச்செயலாளராக" தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

- தெற்காசி மனித உரிமைகள் சர்வதேச மாநாடு 2018, ஏப்ரல் 9 முதல் 11 வரை நேபாள நாட்டு தலைநகர் காத்மாண்ட் நகரில் நடைபெறுகிறது. இந்த மாநாட்டின் கருப்பொருள்: Identifying Challenges, Assessing Progress, Moving Forward: Addressing Impunity and Realizing Human Rights in South Asia.

- சென்னை மாமல்லபுரம் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள திருவிடந்தையில், மத்திய பாதுகாப்பு துறை சார்பில் இராணுவ கண்காட்சி (DefexpoIndia-2018), ஏப்ரல் 11 அன்று தொடங்கி 14 வரை நடக்கிறது.
- இராணுவத்திற்கு தேவையான தளவாட பொருட்களை தயாரித்து வழங்கும் அனைத்து சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களையம் ஊக்குவிக்கும் வகையில் இந்த இராணுவ கண்காட்சி நடத்தப்படுகிறது.

- 2018 நீர், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்: அறிவு பகிர்வு மற்றும் கூட்டு" பற்றிய முதல் சர்வதேச மாநாடு 2018 ஏப்ரல் 10 அன்று நேபாள நாட்டு காத்மாண்ட் நகரில் தொடங்கியுள்ளது. (International conference on 'Water, Environment and Climate Change: Knowledge Sharing and Partnership).

OXFORD IAS ACADEMY